JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | 31/2015 |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | PW1 | Prosecution /Defence / Court | |
| Name | Poongodi | Caste | |
| Father's Name | W/o.Raju | Calling | |
| Village | Bhavani Main Road | Religion | |
| Taluk | Perundurai | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of
Date: 21.09.2021

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்படி விலாசத்தில் குடும்பத்துடன் குடியிருந்துவருகிறேன். கடந்த 20.11.2014 ஆம் தேதியில் மதியம் 3.30 மணி இருக்கும் நான் எனது வீட்டிலிருந்தேன். அப்பொழுது யாருமில்லை. யாரோ காலிங்பெல் அடித்த சத்தம்கேட்டது. நான் கேட்டை திறந்து வெளியே வந்து யாரென்று நான் கேட்டேன். சுமார் 3 நபர்கள் வந்திருந்தார்கள். கண்ணன் என்பவருக்கு பார்சல் வந்திருப்பதாகவும் அவர் இருக்கிறாரா என்று கேட்டார்கள் நான் அவர் இல்லை என்று சொன்னேன். அதற்கு பார்சலை வாங்கிக்கொள்ளுமாறும் கையெழுத்திடுமாறும் கூறினார்கள். பார்சலை நான் வாங்கிக்கொண்டு வீட்டிற்குள் வந்துவிட்டேன். அப்பொழுது நான் திரும்பி பார்த்தபோது என் பின்னாலேயே பார்சல் கொடுத்த ஒரு நபர் வந்து நின்றார். என்னவென்று நான் கேட்டபோது குடிக்க தண்ணீர்வேண்டும் என்று கேட்டார். நான் பார்சலை வைத்துவிட்டு தண்ணீர் எடுக்க வீட்டிற்குள் சென்றேன். பின்னர் மீண்டும் 2 நபர்கள் உள்ளே வந்தார்கள். வந்தவுடன் கதவை தாளிட்டுவிட்டனர். அருகில் இருந்த அறைக்குள் என்னை தள்ளி அமரவைத்துவிட்டனர். சத்தம்போட்டால் கொன்றுவிடுவேன் என்று கத்தியை காட்டி மிரட்டினார்கள். 1 ஆம் எதிரி பார்சலை கொண்டுவந்தவர். 3-வது

எதிரி மற்றும் 4 வது எதிரிகள் அவருடன் வந்தவர்கள் ஆவர். என்னை அறைக்குள் சாத்திவிட்டு அங்கேயே 1 ஆம் எதிரி நின்றுகொண்டார். வீடு முழுக்க மற்ற இரு நபர்களும் தேடிக்கொண்டிருந்தனர். பின்னர் மூவரும் உள்ளே வந்து எனது கைகால்களை பெட்ஷீட்டில் கட்டிப்போட்டனர். அந்த கதவை வெளிப்புறமாக பூட்டிவிட்டு சென்றுவிட்டனர். சிறிது நேரம் கழித்து நானே போராடி கைகால் கட்டை அவிழ்த்துக்கொண்டேன். நான் பெட்ரூம் கதவை திறந்துபார்த்தேன் திறக்க முடியவில்லை. பின்னர் ஜன்னல் வழியாக சத்தம்போட்டேன். அப்போது வீட்டிற்கு பின்னால் உள்ள பாத்திரக்கடையில் இருந்தவருக்கு சத்தம் கேட்டு ஒடி வந்தனர். பின்னர் என் வீட்டின் முன் பால்கடை வைத்திருந்தவரும் ஒடிவந்து கதவை திறக்க முயற்சித்தபோது திறக்க இயலவில்லை. என்னிடம் சாவியும் இல்லை. பின்னர் கதவின் பூட்டை உடைத்து என்னை வெளியேற்றினார்கள். அதன்பின் நான் மற்ற அறைக்குள் சென்று பார்த்தபோது வீடு முழுவதும் கலைந்துகிடந்தது. பீரோவில் உள்ள துணிகள் எல்லாம் கலைந்துகிடந்தது. பீரோவில் வைத்திருந்த கம்மல் -2 செட், காணாமல் போயிருந்தது . மேலும் நான் அணிந்திருந்த ஒரு மோதிரத்தை பிடுங்கிக்கொண்டார்கள். அதன் பின்னர் என் மகன் கண்ணனுக்கு நான் போன் மூலம் தகவல் தெரிவித்தேன். என் மகன் வெளியே சென்றிருந்ததால் வருவதற்கு நேரமாகிவிட்டது. பின்னர் அவர் மாலை 6.00 மணிக்கு வந்து பின்னர் நானும் எனது மகனும் பெருந்துறை காவல்நிலையம் சென்று புகார் அளித்தோம். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **புகார் மனு அ.த.சா.ஆ.1**. புகாரை எனது மகனின் நண்பர் நான் சொல்லசொல்ல எழுதி அதை படித்துகாட்ட நான் சரி பார்த்து கையெழுத்திட்டேன். அன்றைய தினம் 9.00 மணிக்கு போலீசார் எனது வீட்டிற்கு வந்தார்கள். சம்பவ இடத்தை பார்வையிட்டனர். கைரேகை எடுத்தார்கள். 19.12.2014 ஆம் தேதியில் எனக்கு பெருந்துறை காவல்நிலையத்திலிருந்து அழைப்பு வந்தது. அதன்பேரில் நான் காவல்நிலையம் சென்றபோது தற்பொழுது 2-வதாக அமர்ந்திருக்கும் நபரை அடையாளம் காட்டினேன். (3-வது எதிரி).

பின்னர் என்னுடைய 2 செட் கம்மலையும், ஒரு மோதிரத்தையும் நான் அடையாளம் காட்டினேன். தற்பொழுது நீதிமன்றத்தில் உள்ள புகைப்படத்தில் உள்ள கம்மலும், மோதிரம் தான் அது. மோதிரம் **அ.த.சா.பொ.1 மற்றும் 2 ஜோடி கம்மல்கள் அ.த.சா.பொ.2. (2 எண்ணிக்கைகள்).** பின்னர் நீதிமன்றத்தில் மனு செய்து மேற்படி சான்றுபொருட்களை பெற்றுக்கொண்டேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**.,

இந்த சம்பவத்திற்கு முன்னர் நான் எதிரிகளை பார்த்ததில்லை என்றால் சரிதான். நான் எனது புகாரில் எதிரிகளின் அடையாளங்கள் எதுவும் சொல்லவில்லை. அன்றைய தினம் சம்பவத்தில் ஈடுபட்டவர் 3 நபர்கள் என்றால் சரிதான். எனது முதல்விசாரணையில் 1 ஆம் எதிரி பார்சலை கொடுத்தார் என்றும் அதை நான் பெற்றுக்கொண்டு கையெழுத்திட்டேன் என்று கூறியுள்ளதை போலீசார் நகைகளை கைப்பற்றிய பின்னர் நான் காவல்நிலையம் சென்றபோது மேற்சொன்ன விவரத்தை கூறினேனா என்றால் கூறினேன். பார்சல் கொண்டுவந்தவரை நான் காவல்நிலையத்தில் பார்த்தேனா என்றால் பார்த்தேன். 19.12.2014 தேதியில் காவல்துறையினர் என்னை அழைத்ததன்பேரில் நான் காவல்நிலையம் சென்றபோது எத்தனை நபர்களை அடையாளம் காட்டினேன் என்றால் அங்கு நிறைய நபர்கள் இருந்தார்கள் அதில் 2 நபர்களை நான் அடையாளம் காட்டினேன். சுமாராக எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் சம்பவம் நடந்து 7 வருடம் ஆகிவிட்டதால் தற்பொழுது நினைவில்லை. ஒரு 10 பேர் இருந்ததிருக்கக்கூடும். புகாரிலும் போலீசார் விசாரணையிலும் என்னுடைய நகைக்கு ஏதேனும் குறிப்பிட்ட அடையாளம் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். மோதிரத்தை எந்த கைவிரலில் அணிந்திருந்தேன் என்று புகாரிலோ போலீசார் விசாரணையிலோ கூறினேனா என்றால் இல்லை. புகாரில் மோதிரத்திற்கு எதாவது அடையாளம் கூறியிருந்தேனா என்றால் பிளைன் மோதிரம் என்று கூறியிருந்தேன். அந்த மோதிரத்திற்கு எந்த

குறிப்பிட்ட அடையாளமும் சொல்லவில்லை. அதேபோல் கம்மல்களுக்கும் அடையாளம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 2 செட் கம்மல் என்று மட்டும் புகாரிலும் போலீசார் விசாரணையிலும் கூறியுள்ளேன். மேற்படி அடையாளங்களை போலீசாரும் கேட்கவில்லை நானும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் நீதிமன்றத்திலிருந்து பெற்றுச்சென்ற கம்மல்களிலும் குறிப்பிட்ட அடையாளங்கள் எதுவுமில்லை என்றால் சரிதான். எதிரிகள் பார்சலை கொண்டுவந்ததாக கூறியுள்ளேன் அதை போலீசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் அதை எதிரிகளே எடுத்துச்சென்றுவிட்டார்கள். எனது கைகால்களை கட்டிப்போட்டபோது நான் ஏதேனும் சத்தம்போட்டேனா என்றால் இல்லை. என் வாயில்துணி வைத்து அடைத்தார்களா என்றால் இல்லை. நான் எனது ஜன்னலை திறந்து பக்கத்தில் இருந்தவர்களிடம் சொன்னவுடன் அவர்கள் வந்து என்னை காப்பாற்றினார்கள் என்ற விவரத்தை புகாரிலே போலீசார் விசாரணையிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல கூறியுள்ளேன். என்னிடம் சாவி உள்ளதா என்று ஜன்னல்வழியாக கேட்டதாகவும் சாவி இல்லாததால் அவர்கள் பூட்டை உடைத்து என்னை காப்பாற்றினார்கள் என்ற விவரத்தை புகாரிலோ போலீசார் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. சாவி இல்லாததால் கதவை உடைத்து என்னை காப்பாற்றினார்கள் என்று புகாரிலும் விசாரணையிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனது மகன் கண்ணன் வந்தபின்னர் இருவரும் காவல்நிலையத்திற்கு சென்றோம் என்றால் சரிதான். நான் புகாரை வீட்டில்வைத்து எழுதி அதன்பின்னர்தான் காவல்நிலையம் வந்தேன். யார் புகாரை எழுதினார்கள் என்றால் எனது மகனுடைய நண்பர் எழுதினார் பெயர் தெரியாது. புகாரை எழுதியவர் புகாரில் கையெழுத்திட்டாரா என்றால் அதை என் மகனிடம்தான் கேட்கவேண்டும். புகாரில் என் மகன் கையெழுத்திட்டாரா என்றால் கையெழுத்திட்டிருப்பார். என் மகன்தான் புகாரிலிருந்து எல்லாமே தயார் செய்தது. புகார் எழுதியபோது அருகில் இருந்தவர்கள் இருந்தனர் என்றால் சரிதான். புகாரை என் மகன் படித்துப்பார்த்து என்னை கையெழுத்திடச்சொன்னான் நானும்

கையெழுத்திட்டேன். போலீசார் கைரேகை எடுத்தனர் என்றால் சரிதான். மோப்பநாய் அழைத்துவந்தனரா என்றால் இல்லை. சம்பவ இடத்தை புகைப்படம் எடுத்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். என்னை கட்டிவைத்திருந்த பெட்ஷீட்டை நான் போலீசாரிடம் காண்பித்தேன் என்றால் சரிதான். அதை அவர்கள் பெற்றுக்கொண்டார்களா என்றால் இல்லை. காவல்நிலையத்தில் என்னை அழைத்து நான் அடையாளம் காட்டியபோது சுமார் 10 பேரில் எதிரி இம்ரான் ஒரு நபரைத்தான் அடையாளம் காட்டினேன். மறுபடியும் போலீசார் என்னை அடையாளம் காட்ட அழைக்கவில்லை. நான் காவல்நிலையம் சென்று எதிரி இம்ரான்-ஐ அடையாளம் காட்டவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் கைப்பற்றியுள்ள சொத்துக்களும் காணாமல்போனதான சொல்லப்படும் சொத்துக்களும் எந்த சம்மந்தமும் இல்லையென்றால் சரியல்ல. வேறு எங்கோ கிடைத்த வழக்கு சொத்துக்களை இவ்வழக்கில் என்னுடையது என சொல்லி என்னிடம் ஒப்படைத்துள்ளார்கள் என்றும் நான் போலீசார் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, 5சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர், பெருந்துறை.

Signature of the Witness

Name of the Interpreter
Tmt.K.S.Shabeena, B.A.B.L.
Judicial Magistrate,
Perundurai.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) on the-----day of --------------2021.

Signature of Interpreter